| | நிர்ணயம் செய்த தொகையை வசூலிக்கலாம்.<br>2. நகராட்சி நிர்வாக நலன் கருதி அட்டவணை 2ல் உள்ள கடைகளுக்கு 15% உயர்வு செய்து வாடகை வசூலிக்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். மேலும், அக்கடைகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் தலைமையில் வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு குழு நிர்ணயம் செய்யும் தொகையை வசூலிக்கலாம்.<br>3. இந்நகராட்சியில் 100 கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , வேலூர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட குழுவின் மூலம் மறுநிர்ணயம் செய்யப்பட்ட பின்பு நிர்ணயம் செய்த தொகையினை செலுத்த ஒப்புக்கொள்ளாத ஆட்சேபனை தொகை குத்தகைதாரர் கடைகளுக்கு மறு ஏலம் நடத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். | | |
| 15 | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட சென்னை மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஆதிலட்சுமி திருமண மண்டபமானது 1998-1999 ஆம் ஆண்டு முதல் சொத்துவரி செலுத்தாமல் நிலுவையில் உள்ளதாலும், தனக்கு விதிக்கப்பட்ட வரி தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் மனுதாரர் திரு . ராமலிங்கம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.18551/2020 நாள். 26.11.2021-ன் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மனுதாரருக்கு மறு அளவீடு செய்து வரி விதிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நகராட்சி அலுவலர்களால் குழு அமைக்கப்பட்டு 22.02.2023 ஆம் நாளில் மறு அளவீடு செய்யப்பட்டது. இவ்வளவீட்டின் அடிப்படையில் இம்மண்டபத்திற்கு வரி திருத்தம் செய்து வரி விதிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு<br><br>**அலுவலக குறிப்பு** –<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | 47 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 16 | இந்நகர மன்ற தீர்மான எண். 242 மற்றும் 243 நாள். 21.10.2022 -ன்படி இந்நகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 25.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | 48 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | |
| 1 | வார்டு எண். 19, காமராஜ் தெரு, அண்ணா தெரு மினி பவர் பம்ப் சீரமைக்கும் பணி | 3.00 | திரு. எஸ். அருள் , சிறுபாக்கம், உளுந்தூர்பேட்டை<br>எஸ்.பி , கன்ஸ்ட்ரக்ஷன் , உளுந்தூர்பேட்டை | -0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் திரு. எஸ். அருள் |
| 2 | வார்டு எண். 19, கந்தசாமிபுரம் மேற்கு | 2.00 | திரு. எஸ். அருள் , | -0.01% |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr>
<td></td>
<td>தெருவில் ஓம்சக்தி கோயில் அருகில் மினி பவர் பம்ப் சீரமைக்கும் பணி</td>
<td></td>
<td>சிறுபாக்கம், உளுந்தூர்பேட்டை</td>
<td rowspan="2">குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் திரு. எஸ். அருள்</td>
</tr>
<tr>
<td></td>
<td></td>
<td></td>
<td>எஸ்.பி , கன்ஸ்ட்ரக்ஷன் , உளுந்தூர்பேட்டை</td>
</tr>
</table>
அலுவலக குறிப்பு –<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>17</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பாளையப்பட்டு தெருவில் தெருவில் அமைந்துள்ள அங்காளம்மன் கோயிலில் மயானக்கொள்ளை திருவிழா நடைபெற இருந்த நிலையில் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று அப்பகுதியில் உள்ள மண் திட்டுக்கள் மற்றும் C&D Waste களை அப்புறப்படுத்தியும் கால்வாய் மண் அகற்றியும் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு 3D Excavator (JCB) இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான செலவினம் ரூ.46500/-னை விநாயகா எர்த் மூவர்ஸ்,உளுந்தூர்பேட்டை நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு<br>
அலுவலக குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>49</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>18</td><td>உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் அவசர அவசியம் கருதி ரசீது இயந்திரம் வாங்கியமைக்கு சப்ளை செய்த ஆதவ் சொலியூசன் விழுப்புரம் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ. 8500/- வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>50</td><td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>19</td><td>உளுந்தூர்பேட்டை நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-2023 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.ஆ5/1550/2022 நாள். 27.02.2023-ன்படி கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு.<br><table><tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்</th></tr><tr><td>1</td><td>அண்ணாநகர் பகுதியில் நியாய விலைக் கடை கட்டடம் அமைத்தல்</td><td>15.00</td></tr><tr><td>2</td><td>16-வது வார்டு பகுதியில் தமிழ்நாடு ஹோட்டல் பின்புறம் பு.கிள்ளனூர் ஏரி வாய்க்காலில் சிறுபாலம் அமைத்தல்</td><td>9.50</td></tr><tr><td></td><td>மொத்தம்</td><td>27.5</td></tr></table>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>51</td><td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>20</td><td>உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட தாட்கோ கடைகளுக்கு அருகில் உள்ள நான்கு கடைகள் மிகவும் சேதமடைந்து பயன்படுத்தப்பட இயலாத நிலை இருப்பதாலும், 2021-2022 ஆண்டு வரை நகராட்சி விதிமுறைகளுக்கு உட்பட்டு வாடகை செலுத்தியதாகவும், மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் அக்கடைகள் முழுமையாக சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதாகவும், நடப்பு</td><td>52</td><td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>ஆண்டு வரை வாடகை செலுத்துவதாகவும் குத்தகைதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளனர். ஆகையால் கட்டிடத்தை முழுமையாக இடித்து அப்புறப்படுத்திடவும், UTIS மென்பொருளில் பட்டியலில் இருந்து கீழ்க்கண்ட விவரப்படி உள்ள வாடகை தொகையை கேட்பு பட்டியலில் இருந்து நீக்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>வரி விதிப்பு எண்</th><th>குத்தகைதாரர் பெயர்</th></tr>
<tr><td>38</td><td>79</td><td>எஸ்.காசிலிங்கம்</td></tr>
<tr><td>39</td><td>80</td><td>ஆர்.ராஜேஷ்</td></tr>
<tr><td>40</td><td>81</td><td>ராஜேந்திரன்.சி</td></tr>
<tr><td>43</td><td>102</td><td>அய்யப்பன்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு –<br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>21</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சியில் தாட்கோ கடைகள் குறித்த நிலுவை விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>கடையின் விவரம்</th><th>குத்தகைதாரர் பெயர்</th><th>Assessment No</th><th>□□□□□ □□□□□□ (2021–2022 □□□)</th><th>வசூல் செய்த தொகை</th><th>நிலுவை தொகை(5-6)</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td><td>6</td><td>7</td></tr>
<tr><td>1</td><td rowspan="2">தாட்கோ மேல்புற</td><td>எஸ். ராஜன்</td><td>–</td><td>169960</td><td>169960</td><td>0</td></tr>
<tr><td>2</td><td>எ. செங்கேணி</td><td>176/105</td><td>501678</td><td>20000</td><td>481678</td></tr>
</table></td>
<td>53</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | கடைகள் | எஸ். சக்திவேல் | 176/106 | 325953 | 0 | 325953 |
| 4 | | எம். பச்சைக்கண்ணு | 176/107 | 366620 | 0 | 366620 |
| 5 | | டி.விஸ்வநாதன் | 176/108 | 366620 | 0 | 366620 |
| 6 | | கே. இளையபெருமாள் | 176/109 | 342174 | 0 | 342174 |
| 7 | | பு. ஏழுமலை | 176/110 | 335811 | 0 | 335811 |
| 8 | | குப்புசாமி | 176/111 | 335811 | 0 | 335811 |
| 9 | | மு. இளையபெருமாள் | 176/112 | 335811 | 0 | 335811 |
| 10 | | எ. கலியன் | 176/113 | 341106 | 0 | 341106 |
| மொத்தம் | | | | **3421544** | **189960** | 3231584 |
| 11 | | எ. சந்திரபாபு | – | 490512 | 490512 | 0 |
| 12 | | காசிநாதன் | 176/114 | 457288 | 40000 | 417288 |
| 13 | | சௌந்தர்யா பாண்டியன் | 176/115 | 457288 | 30000 | 427288 |
| 14 | தாட்கோ கீழ்புற கடைகள் | எம். ஆனந்தபத்மநாப செல்வம் | 176/116 | 333476 | 50000 | 283476 |
| 15 | | எஸ். கண்ணன் | 176/117 | 300569 | 0 | 300569 |
| 16 | | என். ரமேஷ்பாபு | – | 324677 | 324677 | 0 |
| 17 | | கே. சுப்புராயல் | 176/118 | 306677 | 50000 | 256677 |
| 18 | | எஸ் பக்கிரி | 176/119 | 207544 | 0 | 207544 |
| 19 | | எஸ். சண்முகம் | 176/120 | 321685 | 50000 | 271685 |
| 20 | | எஸ்.கண்ணன் | 176/114 | 323405 | 50000 | 273405 |
| மொத்தம் | | | | **3523121** | **1085189** | **2437932** |
| **ஆக மொத்தம்** | | | | **6944665** | **1275149** | **5669516** |

| | | | |
|---|---|---|---|
| | இந்நகராட்சியில் தாட்கோ கடைகளின் நிலுவை தொகை ரூ. 6944665/- ல் இருந்த நிலையில் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு ரூ. 1275149/- வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், நிலுவைத்தொகையாக ரூ. 5669516/- உள்ளது. நிலுவையிலுள்ள கடைகள் குறித்த முழு விவரம் மன்றத்தின் பார்வைக்கு மேற்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் வேலூர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்ட 18.03.2022 அறிவுரையின்படி இவ்வலுவலக ந க. எண் 4/2022/அ3 நாள் 21.03.2022 ன் வாயிலாக நிலுவைத்தொகை செலுத்திட 24 மணி நேர அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நகர மன்ற தீர்மான எண். 14 நாள் 06.04.2022 ன் படி தாட்கோ கடைகளுக்கு அரசு விதிகளின்படி வசூலிக்க மன்றம் ஒப்புதல் வழங்கியது. மேலும் இவ்வலுவலக ந.க.எண்.04/2022/அ2 நாள்.28.10.2022, 20.02.2023 மற்றும் 10.03.2023ன் வாயிலாக தாட்கோ கடை குத்தகைதாரர்களுக்கு வாடகை நிலுவையை செலுத்திட அறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்பட்டும் இதுநாள் வரையில் நிலுவை தொகை செலுத்தப்படவில்லை. மேற்படி நிலுவை தொகை செலுத்தாத கடைகளுக்கு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 ன்படி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. நிலுவை தொகை செலுத்தாத கடைகளுக்கு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 ன்படி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | | |
| 22 | **திருமதி. ந. வாசுகி நடராஜன் 11 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**<br><br>i. 11வது வார்டு , பஜனை மடத் தெரு மற்றும் அமைச்சார் கோயில் தெரு | 54 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | இணைக்கும் இடத்தில் ( ராசி ஜீவல்லரி எதிரில் ) உள்ள பாலம் மிகவும் பழுதடைந்து கழிவுநீர் செல்ல முடியாத வகையில் தேங்கி உள்ளது. எனவே, அங்கு புதிய பாலம் (culvert) அமைத்து தர கோருதல்<br>ii. குழந்தைவேல் தெருவில் (முருகன் கோயில் அருகில்) புதியதாக சாலை அமைத்து தர கோருதல்<br>iii. 11வது வார்டில் உள்ள ஒரு மினிபவர் பம்ப் பழுதடைந்துள்ளதை சீரமைத்து தர கோருதல்<br>மேற்காணும் பணிகளை செய்வதற்கான தீர்மானம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 23 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் (நகரம்) 2.0 -ல் மக்கும் குப்பையிலிருந்து தயாரிக்கும் இயற்கை உரத்தை "**செழிப்பு**" என்ற பெயர் மூலம் விற்பனை செய்யவும், இயற்கை உரத்தினை விற்பனை செய்திட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள உதவி இயக்குநர் (உரக்கட்டுப்பாடு) அவர்களிடம் விண்ணப்பித்து அதற்கான உரிமத்தை விரைந்து பெற்றிடவும் மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | 55 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 24 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-2023 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித ந.க.ஆ5/1550/2022 நாள். 27.02.2023-ன்படி அண்ணா நகர் பகுதியில் நியாய விலைக்கடை கட்டடம் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. மேலும், அண்ணா நகர் பகுதியில் கட்டப்பட உள்ள நியாய விலைக்கடையை பொது மக்கள் நலன் கருதி பச்சையப்பா நகர் முதல் தெருவில் மாற்றி அமைத்து | 56 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 25 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் மற்றும் பொது சுகாதார வாகனம் பணியின் அவசர அவசியம் கருதி டீசல் சாரல் ஏஜென்சிஸ் உளுந்தூர்பேட்டை என்ற நிறுவனத்திடம் இருந்து ஜனவரி 2023 முதல் கொள்முதல் செய்யப்பட்டமைக்கும், இனிவரும் காலங்களில் கொள்முதல் செய்திடவும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | 57 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 26 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துரு தயாரிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் கடித ந.க.எண். 8880-2/2022/P1 நாள். 06.03.2023 கோரியதற்கிணங்க, இந்நகராட்சியின் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு | 58 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண். 16, விகேஎஸ் நகர் மயானத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 11.00 |
| 2 | வார்டு எண். 16, ஸ்ரீராம் நகர் விரிவாக்க மயானத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 11.00 |
| | **மொத்தம்** | **22.00** |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டை அங்கீகரித்து நிர்வாக அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 27 | உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள எலக்ட்ரிக் ஒயரிங் செய்யப்பட்டுள்ள அனைத்து ஒயர்களும் மோசமான நிலையில் உள்ளதால் அடிக்கடி தீ பிடித்து மின்தடை ஏற்படுகிறது. மேலும், இதனால் அனைத்து ஒயர்களையும் புதியதாக மாற்றி அமைத்து கொள்ளவும் single phase உள்ள அலுவலகத்தை Three phase ஆக மாற்றி அமைத்து கொள்ள தோராய செலவினம் ரூ. 1,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | 59 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28 | நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் கெடிலம் மட்டிகை ஆரியநத்தம் பகுதிகளில் இருந்து வரும் மெயின் பைப் லைனில் ஏற்படும் பைப் லைன் உடைப்புகளை பழுதுகளை பழுது நீக்கம் செய்ய தோராய செலவீனமாக ரூ. 9,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | 60 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 29 | உளுந்தூர்பேட்டை நகராட்சி மற்றும் சுற்றுவட்டார பல கிராம மக்களின் வசதிக்காக உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் உள்ளே உள்ள காலியிடத்தில் 8*8 அல்லது 8*10 அளவில் இடவசதி செய்து தருமாறு இந்தியா 1 ஏ.டி.எம் மண்டல மேலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், அந்த காலியிடத்திற்கான வாடகை தொகையை செலுத்துவதாக தெரிவித்துள்ளார். மேற்படி | 61 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | பொதுமக்களின் நலன் கருதி பேருந்து நிலையத்தில் உள்ள காலியிடத்தில் இந்தியா 1 ஏ.டி.எம் அமைத்திட மன்றத்தின் அனுமதிக்கு<br><br>**அலுவலக குறிப்பு** –<br><br>மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 30 | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 3 மினிபவர் பம்ப் பழுதடைந்துள்ளதை சரிசெய்ய தோராய செலவினம் ரூ.1,50,000/- மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலக குறிப்பு** –<br><br>மன்றம் அனுமதிக்கலாம் | 62 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 31 | **திருமதி. கே. செல்வகுமாரி இரமேஷ்பாபு, 17 வது வார்டு நகர மன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**<br><br>➢ வார்டு எண். 17, வள்ளலார் தெரு, திருவள்ளுவர் தெரு சந்திப்பு இடத்தில் வடிகால் வாய்க்கால் அருகில் சிறுபாலம் அமைத்து தர கோருதல்<br>மேற்காணும் பணிகளை செய்வதற்கான தீர்மானம் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம் | 63 | |
| 32 | உளுந்தூர்பேட்டை நகராட்சி (முன்னாள் சிறப்புநிலை பேரூராட்சி) திரு. நா.இருதயநாதன் உழுவை ஓட்டுநராக பணிபுரிந்து 29.02.2020 அன்று பணி ஓய்வு பெற்றுள்ள திரு. நா. இருதயநாதன் 13.05.98 முதல் ஓட்டுநராக பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து 29.02.2020 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். பணிப்பதிவேட்டின் படி இவரின் பிறந்த தேதி 21.02.1960 ஓட்டுநர் பணிக்கான ஓய்வு பெறும் வயது 58 என்பதால் இவருக்கு விதிகளின்படி 28.02.2018 ஓய்வு பெற | 64 | |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதித்து இருக்க வேண்டும். ஆனால் 28.02.2020 வரை பணியாற்ற தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும், தனியர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P No. 5674/2020 நாள். 18.08.2021 மீதான உத்தரவின்படியும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண். C.P.No. 655/2022, நாள் . 13.04.2022 அறிவிக்கையின்படியும் டிசம்பர் 2003 முதல் 25.10.2017 வரையிலான காலத்திற்கு ஒப்படைப்பு ஊதியம் மற்றும் வீட்டு வாடகைப்படி நிலுவை தொகை ரூ. 65744/- யும், மருத்துவ விடுப்பு தொகை ரூ. 15564/- ஆகமொத்தம் ரூ.81308/- வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு** –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். | | |
| 33 | உளுந்தூர்பேட்டை நகராட்சி (முன்னர் சிறப்புநிலை பேருராட்சி ) தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. ரா. கிருஷ்ணன் 27.08.2018-ல் இவ்வலுவலக கடித ந.க.எண். 358/2018/அ1 -ன்படி தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். 27.12.2018-ன் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் 01.01.2019 முதல் இவர் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். இவர் பணியில் அமர்த்தப்பட்டுள்ள நாள் முதல் 20.02.2023 வரையில் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்படவில்லை. இவருக்கு 27.08.2018 முதல் கணக்கீட்டு படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஊதியம் தேர்வுநிலை ஊதியம் ரூ.2,30,000/- வழங்கிட மன்றம் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு** –<br>மன்றம் அனுமதிக்கலாம் | 65 | |
| 34 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் தூய்மை பணியாளர்களாக பணிபுரிந்து வரும் திருமதி. சரளா, திருமதி. குப்பம்மாள் மற்றும் திருமதி. ராஜாமணி ஆகியோர்கள் பத்து ஆண்டுகள் பணி நிறைவு பெற்றுள்ளதால் அவர்களுக்கு தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்திடவும், திரு. பழனி என்பவர் | 66 | |

| | | | |
|---|---|---|---|
| | முப்பது ஆண்டுகள் பணி நிறைவு பெற்றுள்ளதால் அவருக்கு மிகை ஊதியம் வழங்கிடவும் தோராய செலவினம் ரூ . 3,00,000/- மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு** –<br>**மன்றம் அனுமதிக்கலாம்.** | | |
| 35 | சங்கராபுரம் வட்டம், சேஷசமுத்திரம் கிராமத்தினை சார்ந்த திரு. வைத்தீஸ்வரன் த/பெ. தம்பிதுரை என்பவர் உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் மேல்பகுதியில் LED TV(10X8) என்ற அளவில் வைத்து (அரசு மற்றும் தனியார்) விளம்பரம் செய்திட அனுமதி கோரியதற்கு குறிப்பாணை பரிந்துரை அனுப்பக் கோரி தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி பேருந்து நிலைய கட்டிடத்தின் மேல் பகுதியை 22.02.2023 அன்று ஆய்வு செய்யப்பட்டது ஆய்வில் மனுதாரர் தெரிவித்துள்ள அளவு அரசாணை எண். 47 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 26.06.2003-ன் படி உள்ளது என்பதால் பேருந்து நிலைய மேற்குபுற வளாகத்தின் மேல் (10X8) என்ற அளவில் LED TV வைக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு** –<br>**மன்றம் அனுமதிக்கலாம்** | 67 | |
| 36 | உளுந்தூர்பேட்டை நகராட்சி 2021-ம் ஆண்டு சிறப்பு நிலை பேரூராட்சியிலிருந்து அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள். 01.11.2021-ன்படி ஆண்டு இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி 8.6 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டு, 2011-ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 23734 மக்கள் தொகையுடன் 24 வார்டுகளை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகை (தோராயமாக) 26724 எண்ணிக்கை கொண்டுள்ளது. | 68 | |

| | | | |
|---|---|---|---|
| | உளுந்தூர்பேட்டை நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் தற்போது குறைந்த அளவிலான அடிப்படை வசதிகள் உள்ளதால், அப்பள்ளிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், கல்வி தரத்தை உறுதி செய்திடவும், அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளையும் நகராட்சி பள்ளி கட்டிடங்களை உளுந்தூர்பேட்டை நகராட்சியின் பராமரிப்பில் எடுத்துக்கொள்வதற்கு ஏதுவாக கருத்துரு அனுப்பி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள 1. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, உளுந்தாண்டார் கோயில் காலனி, 2. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, உளுந்தாண்டார் கோயில், 3. ஊராட்சி ஒன்றிய இந்து நடுநிலைப்பள்ளி 4. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 5. அரசு பெண்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளை நகராட்சி பள்ளியாக மாற்றம் செய்வதற்கும், பராமரிப்பதற்கும் மன்ற ஒப்புதல் பெற்று அரசின் அனுமதி ஆணை பெறுவதற்கு உரிய முன்மொழிவினை அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம். | | |
| 37 | உளுந்தூர்பேட்டை நகராட்சி அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை, நாள். 01.11.2021 ன்படி சிறப்புநிலை பேரூராட்சியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. உளுந்தூர்பேட்டை நகராட்சி 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து வசூல் செய்யப்படும் சொத்து வரி தொகையில் கீழ்க்கண்ட விபரபடி நிர்வாக செலவினங்கள் அடிப்படையில் சொத்து வரியில் அடங்கிய விகிதாச்சார கூறுகள் ( Components of Taxes ) வசூல் செய்யப்பட்டு வருகிறது. சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்ட வரி வசூல் ஆய்வுக்கூட்டங்களில் நகராட்சிப்பகுதிகளில் செயல்பட்டு வரும் அனைத்து பள்ளிகூடங்களையும் நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளவும், | 69 | |

அப்பள்ளிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தற்போது வசூல் செய்யும் சொத்து வரியில், கல்வி வரி தொகையினை பிரித்து வசூல் செய்ய நகர மன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள பொது விகிதாச்சார கூறுகள்

| வ. எண் | வரி இன விபரம் | வசூல் செய்யப்படும் விகிதாச்சார கூறுகள் | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | பொது வரி | (பொது நோக்கம் , சுகாதாரம், தெரு விளக்கு உள்பட) | 8% |
| 2. | குடிநீர் மற்றும் வடிகால் வரி | - | 3% |
| 3. | கல்வி வரி | - | 0 |
| 4. | நூலக வரி | - | 1.10% |

தற்போது, உளுந்தூர்பேட்டை நகராட்சிப் பகுதியில் கல்விதுறை கட்டுப்பாட்டில் இயங்கிவரும் அனைத்து பள்ளிகளின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து பள்ளிகளையும் நகராட்சி வசம் எடுத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, உளுந்தூர்பேட்டை நகராட்சிப் பகுதிக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு சொத்து வரியில் வசூல் செய்யப்படும் தற்போதைய விகிதாச்சார கூறுகளில் கல்வி வரியினை பிரித்து வசூல் செய்ய கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்படுகிறது.

திருத்தி அமைக்கப்படவுள்ள பொது விகிதாச்சார கூறுகள்

| வ.எண் | வரி இன விபரம் | தற்போது வசூல் செய்யப்படும் சதவீதம் | தற்போது திருத்தி அமைக்கப்படும் சதவீதம் |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1. பொது வரி 8% 6%<br>2. குடிநீர் மற்றும் வடிகால் வரி 3% 2%<br>3. கல்வி வரி 0 3%<br>4. நூலக வரி 1.10% 1.10%<br>கூடுதல் 12.10 % 12.10 % | | |

| | | |
|---|---|---|
| 1. | பொது வரி | 8% | 6% |
| 2. | குடிநீர் மற்றும் வடிகால் வரி | 3% | 2% |
| 3. | கல்வி வரி | 0 | 3% |
| 4. | நூலக வரி | 1.10% | 1.10% |
| கூடுதல் | | 12.10 % | 12.10 % |

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்க்கண்டவாறு பொது வரியில் கல்வி வரியினை திருத்தி அமைத்து வசூல் செய்யப்படும் போது பள்ளிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், அரசிடமிருந்து இணை மான்யம் பெறவும் வழிவகை
உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

38

உளுந்தூர்பேட்டை நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022-ன் முன்னெச்சரிக்கை தடுப்பு மற்றும் மீட்பு நடவடிக்கை பணிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920-ன்படி பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டமைக்கு செலவின தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | வழங்கப்பட்ட தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் வடகிழக்கு பருவமழை 2022-ன் முன்னெச்சரிக்கை | | |

70

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கையாக மழைநீர் வடிகால் வாய்கால்களை தூர்வாரி மழைநீர் தடையின்றி செல்லும் வகையில் அமைப்புகள் செய்தல் , மழைநீர் தேங்கி நிற்கும் இடத்தில் மோட்டார் பம்புகள் அமைத்து மழைநீரை வெளியேற்றுதல் மற்றும் வடிகால்வாய் இன்றி உள்ள பகுதிகளில் நீர் உறிஞ்சும் வாகனம் மூலம் மழைநீர் வெளியேற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல் | M/S அருள் கன்ஸ்ட்ரக்ஷன் | ரூ 4,47,415 /- |

**அலுவலக் குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் பிரிவு 15 ன் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

1. வடகிழக்கு பருவமழை 2022-ன் முன்னெச்சரிக்கை தடுப்பு மற்றும் மீட்பு நடவடிக்கை பணிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920-ன்படி பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டமைக்கு செலவின தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 39 | உளுந்தூர்பேட்டை நகராட்சியின் 2022-2023ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2023-2024ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது. | 71 | |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்து அனுமதிக்கலாம் | | |
| 40 | உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சியாக செயல்பட்ட போது பணியில் சேர்ந்து தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு. கா. கமல் என்பவரும், இரவுக்காவலராக பணிபுரியும் திரு. மாதவன் என்பவரும் தங்களது தாய்த்துறையான பேரூராட்சித் துறைக்கே செல்ல விருப்பம் தெரிவித்து மனு அளித்துள்ளனர். இருவரின் விண்ணப்பங்களை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் ஆணையர் சென்னை, மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடலூர் மனுவினை தக்க நடவடிக்கைக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு<br><br>**அலுவலக குறிப்பு** –<br><br>மன்றம் அனுமதிக்கலாம் | 72 | |
| 41 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பொது சுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு , மற்றும் நகராட்சி தொடர்பான அனைத்து வகையான விளம்பரங்கள் வெளியிட தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு உரிய நிறுவனத்திற்கு தொகை வழங்கிட ஒரு ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.5,00,000/-ஐ வருவாய் நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு** –<br><br>மன்றம் அனுமதிக்கலாம் | 73 | |
| 42 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் O & M 2019-2020 திட்டத்தின் கீழ் ரூ 60.00 லட்சம் மதிப்பீட்டில் உளுந்தாண்டார் கோவில் , உளுந்தூர் காலனி மற்றும் பேபி நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் பணிக்கு பேரூராட்சியாக செயல்பட்ட போது 06.12.2019 அன்று ஒப்பந்ததாரர் D. | 74 | |

| | | | |
|---|---|---|---|
| | முருகன் என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி இப்பணியானது உளுந்தாண்டார் கோவில் , உளுந்தூர் காலனி , மற்றும் பேபி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் 1200 மீட்டர் நீளத்திற்கு தார் சாலையும் உளுந்தூர் காலனி பகுதியில் 50 மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால் வாய்க்கால் மற்றும் இரண்டு சிறு பாலம் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே உளுந்தூர் காலனி பகுதியில் கால்வாய் அமைக்க தேர்வு செய்யப்பட்ட பகுதியில் அனைத்து குடியிருப்புகளிலும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதால் மேற்கண்ட இடங்களுக்கு அருகில் மழை நீர் செல்வதற்காக நகராட்சி மூலம் உளுந்தூர் ஏரி ஓடை ஒன்று பராமரிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் மழை நீர் வடிகால் வாய்க்கால் மற்றும் சிறுபாலம் அமைக்க போதிய அவசியம் இல்லாத காரணத்தால் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ஒதுக்கப்பட்ட நிதியில் கூடுதலான தார்சாலை அமைக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>மன்றம் அனுமதிக்கலாம். | | |
| 43 | கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 3/525/2023 நாள்.24.03.2023 -ன்படி கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தமிழ் இணையக் கல்விக்கழகம் சார்பில் மாபெரும் தமிழ்க்கனவு என்ற திட்டத்தின் கீழ் தமிழ்ப்பண்பாட்டின் பெருமையை கல்லூரி மாணவர்களுக்கு உணர்த்தும் வகையில் 31.03.2023 அன்று கள்ளக்குறிச்சி வட்டம் சிறுவங்கூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவக்கல்லூரியில் மாபெரும் தமிழ்க்கனவு நிகழ்ச்சியினை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, நகராட்சி ஆணையர்கள், கூட்டுறவு சங்கங்கள் கள்ளக்குறிச்சி அவர்களுக்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் மாணவ மாணவியருக்கு மதிய உணவு ஏற்பாடு செய்திடுமாறு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த | 75 | |

<table>
<tr>
<td></td>
<td>நிலையில் அந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி 800 மாணவ/ மாணவியர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்திட அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் . இந்நகராட்சியின் மூலம் 160 மாணவர்களுக்கு மதிய உணவு ஏற்பாடு செய்ய தோராய செலவினம் ரூ.20,000/- மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>44</td>
<td>இந்நகராட்சியின் தீர்மான எண்.29 நாள்.06.04.2022 மன்ற அனுமதியின்படி ஒப்பந்த அடிப்படையில் சுய உதவிக்குழுக்களுக்கு ஜனவரி /2023 முதல் பிப்ரவரி /2023 முடிய மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தினக்கூலி விகிதத்தின் அடிப்படையில் குறைவான ஊதிய விகிதத்திற்கு ஒப்புக்கொண்ட கீழ்க்கண்ட குழுக்களுக்கு கீழ்க்கண்ட விவரப்படி ஊதியம் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>சுய உதவி குழுவின் பெயர்</th><th>பணியாளர்களின் எண்ணிக்கை</th><th>ஜனவரி/2023 ஊதியம் வழங்கப்பட்ட விவரம்</th><th>பிப்ரவரி /2023 ஊதியம் வழங்கப்பட்ட விவரம்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>பகத்சிங் ஆண்கள் சுய உதவிக்குழு</td><td>34</td><td>455568</td><td>414928</td><td>870496</td></tr>
<tr><td>2</td><td>அங்களாம்மன் மகளிர் சுயஉதவிக்குழு</td><td>34</td><td>462760</td><td>418600</td><td>881360</td></tr>
<tr><td>3</td><td>அம்பேத்கார் சுய உதவிக்குழு</td><td>24</td><td>320448</td><td>288013</td><td>608461</td></tr>
</table>
மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.24608/2022/EA2</td>
<td>76</td>
<td></td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | நாள்: 21.10.2022 மற்றும் 11.11.2022 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்கொள்ள வெளிக்கொணர்வு (Out Sourcing) அடிப்படையில் பணியாளர்கள் மற்றும் வாகனங்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 20.03.2023 அன்றைய காணொளி வழி ஆய்வு கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் நடைமுறைபடுத்தப்படும் வரை அல்லது ஜீன் 30 வரை ஏற்கனவே நடைமுறையில் உள்ள சுய உதவிக்குழு மூலமே பணிகள் மேற்கொண்டு அக்குழு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.12/3737/2020 நாள். 04.08.2021 -ன்படி நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தினை தொடர்ந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு** –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.12/3737/2020நாள். 04.08.2021 -ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை விட குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது . எனவே, மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>3. இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் மேற்கொள்ள வெளிக்கொணர்வு (Out Sourcing) அடிப்படையில் பணியாளர்கள் மற்றும் வாகனங்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள நடைமுறைபடுத்தப்படும் வரையில் தொடர்ந்து சுய உதவிக்குழுக்கள் மூலமாகவே ஒப்பந்த அடிப்படையில் ஏற்கனவே உள்ள நடைமுறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.12/3737/2020 நாள். 04.08.2021 -ன்படி நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தினை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். | | |

**நகர மன்ற தலைவர்**

**உளுந்தூர்பேட்டை நகராட்சி**